பீட்டர் மாமா

விசில் கட்சி விஜபி மூலம் தில்லுமுல்லு நிறுவனம் 5 ஆண்டுக்குப்பிறகு ரீ என்ட்ரி ஆவது பற்றி சொல்கிறார்

wikiயானந்தா

“கடைகோடி மாவட்டத்துல சுறுசுறுப்பா இருந்த காக்கியை நெல்லைக்கு தூக்கியடிச்ச பின்னணி என்னவாம்..” எனக் கேட்டார் பீட்டர் மாமா.

“கடைகோடி மாவட்டத்து தலைநகர காவல்நிலையத்துல ரொம்பவே சுறுசுறுப்பா வலம்வந்த அந்த இன்ஸ்பெக்டரை திடீர்னு நெல்லைச் சீமைக்கு பார்சல் பண்ணியிருக்காங்க.. பின்னணியில சென்னை மேலிடத்தோட அதிரடி ஆக்ஷன் உத்தரவு இருக்காம்.. விஷயம் என்னன்னா, அவரோட சரக பகுதியில செப்டம்பர் 22ம் தேதி நள்ளிரவுல 36 பேர் கொண்ட கும்பல் ஜேசிபி மெஷினோட புகுந்து ஒரு ஓட்டலை அராஜகமா அடிச்சு நொறுக்கிச் சூறையாடியிருக்காங்க.. இந்த விபரீதம் நடக்குறதுக்கு முன்னாடியே பாதிக்கப்பட்ட ஓட்டல் உரிமையாளர் ‘தனக்கு கொலை மிரட்டல் வருது, பாதுகாப்பு கொடுங்க’னு ஸ்டேஷனுக்குப் போய் கதறியும் அந்த இன்ஸ்பெக்டர் காதுலயே வாங்கலையாம்.. சம்பவம் முடிஞ்சு 23ம் தேதி காலையிலேயே புகார் கொடுத்தும் எப்.ஐ.ஆர் போடாம இழுத்தடிச்சு வழக்கை அமுக்கப் பார்த்தாராம்.. இதனால விரக்தியடைஞ்ச ஓட்டல் தரப்பு, அராஜகத்தின் மொத்த சிசிடிவி காட்சிகளையும் ஆதாரமா எடுத்துக்கிட்டு நேரா காக்கி உயர் அதிகாரிகளுக்கு அனுப்புனாங்களாம்.. விவகாரத்தைப் பார்த்து கொதிச்சுப்போன உயர் அதிகாரிகள், ‘முதல்ல எப்.ஐ.ஆர் போடுங்க, பாக்கி பஞ்சாயத்தை அப்புறம் பார்த்துக்கலாம்’னு டோஸ் விட்ட பிறகே, வேறு வழியில்லாம 24ம் தேதிதான் வழக்குப் பதிவு செஞ்சிருக்காங்க.. ஆனா, மேலிடத்துக்கே தண்ணிகாட்ட நினைச்ச காக்கியை சும்மா விடுவாங்களா... அடுத்த சில நாள்லயே அவரை நெல்லைக்கு தூக்கியடிச்சு உத்தரவு பறந்துடுச்சாம்.. இதை பார்த்துட்டு மாவட்டம் முழுக்க இருக்கிற மத்த காக்கிகளெல்லாம் இப்போ ரொம்பவே ஜெர்க் ஆகி கிடக்கிறாங்களாம்..” என்றார் விக்கியானந்தா.

‘‘ஆட்சி மாற்றத்திற்கு பிறகு மாவட்ட காக்கிகள் கூட ரொம்பவே மாறிட்டாங்களாமே..” என்றார் பீட்டர் மாமா.

“ஹனிபீ மாவட்ட காக்கி சட்டையினர் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு ரொம்பவே மாறிட்டாங்க... முன்பு எல்லாம் புகார்கள் வந்தால் உடனடியாக வழக்கு பதிவதை வழக்கமாக கொண்டிருந்தவர்கள், இப்போது எவ்வளவு நாள் கடத்த முடியுமோ, அவ்வளவு நாள் கடத்துகின்றனராம்.. இந்த காலகட்டத்துல ஏதாவது டீலிங் முடியுமா என காத்திருக்கிறார்களாம்.. ஒருவேளை வழக்கு பதியவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், மேல் நடவடிக்கை எடுப்பதில்லையாம்.. காக்கிகளின் ஒரே நோக்கம் எப்படியாவது வசூல் செய்ய வேண்டும் என்பது மட்டும்தான் என்று புகார்கள் அதிகமாக கிளம்பியிருக்கு.. சமீபத்தில் பல கோடி வங்கி மோசடியில் ஈடுபட்ட கிளை மேலாளர் மீது நிர்வாகம் புகார் கொடுத்தும், அவரை கைது செய்யாமல் இழுத்தடித்தாங்களாம்.. இதுவரை முன்ஜாமீன் கிடைக்காத நிலையில், வங்கி மேலாளரிடம் இருந்து வலுவாக கரன்சியை எதிர்பார்த்து அவரை கைது செய்யாமல் காத்திருக்கிறார்களாம்.. போலீசாரின் கண் முன்னரே சுற்றி வந்தாலும் அவரை கைது செய்ய ஆர்வம் காட்டவில்லை என்பதுதான் மாவட்டம் முழுக்க ஒரே பேச்சாக இருக்காம்..”

என்றார் விக்கியானந்தா.

“தேர்தல் கூட்டணி போல, சிறையில் ரவுடிகளுடன் சிறை காக்கிகள் கூட்டணி வச்சிருக்காங்களாமே..” எனக்கேட்டார் பீட்டர் மாமா.

“வெயிலூர் மத்திய சிறையில் முன்பெல்லாம் அடிக்கடி சிறைத் துறையினர் மட்டுமின்றி உள்ளூர் காக்கிகளும் அதிரடி சோதனைகள் மேற்கொள்வார்களாம்.. அப்படியும் சிறைவாசிகள் மத்தியில் கஞ்சா, புகையிலை பொருட்கள் உள்பட தடை செய்யப்பட்ட பொருட்கள், செல்போன் புழக்கம் என்பது தொடர்ந்து வந்த நிலையில், தற்போது இது அதிகரித்துள்ளதாம்.. முன்புபோல வெளியில் இருந்து யாரும் கஞ்சா உள்பட தடை செய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய பொட்டலங்களை சிறைக்குள் வீசுவது இல்லையாம்.. காசு கொடுத்தால் சிறைக்குள் எல்லாமே கிடைக்கும் என்ற நிலைதான் வெயிலூர் சிறையில் இருக்காம்.. சில தினங்களுக்கு முன்பு கூட சிறையில் கஞ்சா பொட்டலங்களை அதிகாரிகள் கைப்பற்றியிருக்காங்க.. குறிப்பிட்ட சிறைக்காவலர்களை கைக்குள் போட்டுக் கொள்ளும் வசதிபடைத்த கைதிகள், அவர்களிடம் பணம் கொடுத்து தங்களுக்கு வேண்டியதை வெளியில் இருந்து வரவழைத்துக் கொள்கிறார்களாம்.. இதில் கஞ்சா மட்டுமில்லை, ரவுடிகளுடன் தகவல்களை பரிமாறிக்கொண்டும் காசு பார்த்து விடுகிறார்களாம் கில்லாடி சிறை காக்கிகள்.. இவர்களோட தில்லாலங்கடி விஷயம் சமீபத்தில தெரியவந்ததும் அதிரிச்சியடைந்த உயர் காக்கிங்க இதுதொடர்பா 3 சிறை காவலர்களை அதிரடியாக டிரான்ஸ்பர் செய்திட்டாங்களாம்.. ரவுடிகளுடன் சிறை காவலருங்க கூட்டணி வைத்து செயல்படுறதால தான் சிறைக்கு செல்லும் குற்றவாளிங்க திருந்தி வராம, கூடுதல் குற்றங்களை கற்று வர்றாங்கன்னு சிறைவட்டாரத்தில் இருந்தே அதிருப்தி குரல்கள் ஒலிக்க தொடங்கி உள்ளதாம்.. இப்போ ரவுடிகளுடன் சிறை காவலர்கள் கூட்டணி விவகாரம் தான் தீ போல பற்றி எரியத் தொடங்கியிருக்குதாம்..” என்றார் விக்கியானந்தா.

“ஐந்து ஆண்டாக ஒதுக்கி வைக்கப்பட்ட தில்லுமுல்லு நிறுவனம் ஒன்று விசில் கட்சி முக்கிய விஜபி மூலம் ரீ என்ட்ரி கொடுப்பது மற்ற ஒப்பந்ததாரர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்காமே..” என்றார் பீட்டர் மாமா.

“மான்செஸ்டர் மாநகராட்சியில் மூன்றெழுத்து பெயர் கொண்ட ஒரு ஒப்பந்த நிறுவனம் பல்வேறு தில்லுமுல்லு வேலைகளில் ஈடுபட்ட காரணத்தால், முந்தைய ஆட்சியில் ஒதுக்கிவைக்கப்பட்டதாம்.. இதன் உரிமையாளர், பல தில்லாலங்கடி வேலைகளை செய்து பல கோடி ரூபாய் பணத்தை சுருட்டியதால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார். கடந்த ஐந்து வருடங்களாக அடக்கி வாசித்த இந்த மூன்றெழுத்து கம்பெனி உரிமையாளர் தற்போது மீண்டும் மான்செஸ்டர் மாநகராட்சிக்குள் நுழைந்துள்ளாராம்.. தனக்கு ஆமாம் சாமி போடும் சில ஒப்பந்ததாரர்களை கையில் வைத்துக்கொண்டு, மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் அசோசியேஷன் என்கிற பெயரில் ஒரு சங்கம் அமைத்துள்ளாராம்.. இவர்களை அழைத்துக் கொண்டு, மாநகராட்சி கமிஷனரிடம் சென்றாராம்.. ஒப்பந்த விதிகளுக்கு எதிராக பல தவறான தகவல்களை அவரிடம் தெரிவித்து, அவரை நம்ப வைத்துள்ளாராம்.. இதன் மூலம், மீண்டும் மாநகராட்சி ஒப்பந்த பணிகளை மேற்கொள்ள கடுமையான முயற்சி செய்துட்டு வர்றாராம்.. இந்த மூன்றெழுத்து கம்பெனி மற்றும் அவரது பினாமி கம்பெனிகள் மூலம் ஏற்கனவே, மான்செஸ்டர் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து ஒன்றிய அரசின் தணிக்கை குழு ஆய்வுசெய்து, பல குற்றச்சாட்டுகளை கண்டுபிடிச்சாங்களாம்.. இதை, அறிக்கையாக சமர்ப்பித்து இருக்காங்க.. இந்த அறிக்கையின் அடிப்படையில், அவர் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப் போறாங்களாம்..

இந்நிலையில், மீண்டும் ஒப்பந்த பணிகளை பெறுவதற்காக, சங்கம் என்ற பெயரில் மாநகராட்சி நிர்வாகத்துக்குள் நுழைவது இதர ஒப்பந்ததாரர்களை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறதாம்.. இந்த ரீ என்ட்ரிக்கு பின்னால் விசில் கட்சி முக்கிய விஜபி ஒருவர் உள்ளாராம்..” என்று முடித்தார் விக்கியானந்தா ■

வலையில் ட்ரெண்டிங்

வாட்ஸ்அப்

கோபமான பெண்களை திருமணம் செய்து கொள்ளுங்கள்... அவர்கள் உங்களிடம் எதையும் மறைக்க மாட்டார்கள், பொய் சொல்ல மாட்டார்கள்..

அப்போதைக்கு அப்போது முகத்தில் நாலு குத்து விழும் அதை மட்டும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

இன்ஸ்டாகிராம்

அட்டைப்பட விளம்பர போட்டோ ஷூட்டில் டாப்சி பன்னு.

டிவிட்டர்

ஒரு நாளின் எல்லா நேரமும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எல்லா நேரமும் கவலைப் பட்டுக் கொண்டும் இருக்க முடியாது. இரண்டுக்கும் இடையே உள்ளது அமைதி. சில மணி நேரங்களாவது அது கிடைத்தால் போதுமானது.

//x.com/asdbharathi

பேஸ்புக்

காசு தர்ற தைரியத்தை இந்த உலகத்துல யாரலையும் தர முடியாது..

ஏன்.. சம்பளம் போட்டாச்சா?

ஆமா. என்ன இப்ப.. 😎

சொல்லிட்டாங்க...

தமிழ்நாட்டில் எல்லா இடத்திலும் மின்வெட்டு, சட்டம் ஒழுங்கு, டாஸ்மாக், பாலியல் வன்கொடுமை பிரச்னைகள் உள்ளன.

- தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா

தூய சக்தி என்று முதல்வர் பிரசாரம் செய்கிறார். இருக்கிறதிலேயே அதிகமாக ஓட்டுக்கு அதிகமா பணம் கொடுத்திருப்பது தவெக என்று பொதுமக்கள் வாக்குமூலம் அளிக்கின்றனர்.

- மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம்.

மதுரை நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற காரில் சென்ற

ஸ்ரீரங்கம் பகுதி திமுக செயலாளர் கைது

கணவர் நிலை தெரியாமல் மனைவி கண்ணீர்

ராம்குமார்

திருச்சி, அக்.2: ஸ்ரீரங்கம் திமுக பகுதி செயலாளர் ராம்குமார். இவர், ஸ்ரீரங்கம் கோயிலுக்கு சொந்தமான பல கோடி மதிப்பிலான இடத்தை அபகரித்து விட்டதாக திருச்சி மாநகர குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து, முன்ஜாமீன் கோரி ராம்குமார் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில், நீதிமன்றத்திற்கு செல்வதற்காக ராம்குமார் காரில் மதுரைக்கு சென்றுள்ளார். அப்போது பஞ்சப்பூர் என்ற இடத்தில் ராம்குமாரை போலீசார் கைது செய்தனர்.

இது குறித்து ராம்குமாரின் மனைவி ஆண்டாள் கண்ணீருடன் நிருபர்களிடம் கூறுகையில்,“ உடல்நலம் சரியில்லாத என்னை கணவர் தான் பார்த்து வருகிறார். இன்று (நேற்று) காலை வழக்கு தொடர்பாக மதுரைக்கு செல்வதாக கூறிவிட்டு அவரே காரை ஓட்டி சென்றுள்ளார். பின்னர் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. உடனே எங்கள் டிரைவர் மற்றொரு காரில் சென்ற போது பஞ்சப்பூர் அருகே அவரது கார் மட்டும் தனியாக நின்றுள்ளது. அதில் அவரது செருப்பும் கிடந்துள்ளது. போலீசாரின் பொய்வழக்கு தொடர்பாக முன்ஜாமீன் மனு தாக்கல் செய்த நிலையில் அவரை கைது செய்து உள்ளனர். ஆன்லைன் மூலமாக கணவர் மாயமானது குறித்து புகார் அளித்துள்ளேன். கணவர் எங்கு இருக்கிறார் என்பது குறித்து போலீசார் தெரிவிக்க வேண்டும். இதுவரை போலீசார் யாரும் என்னை தொடர்பு கொண்டு பேசவில்லை. அவர் எங்கு இருக்கிறார் என தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

ஐகோர்ட் மதுரை கிளையில் ராம்குமாரின் முன்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் அவரை போலீசார் கைது செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், போலீஸ் தரப்பில் முறைப்படி தகவல் வெளியாகவில்லை.

தவெக ஓட்டுக்கு... முதல் பக்க தொடர்ச்சி

ராஜ்மோகன் சொல்லியிருப்பது பொருத்தமானது அல்ல, அது யதார்த்தத்திற்குப் புறம்பானது.

கொலைகள் உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெறுகிறபோது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்கும் தமிழ்நாடு அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

நேற்று மதுராந்தகத்தில் பல கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களிடம் கேட்டபோது, “எந்தெந்தக் கட்சி எல்லாம் பணம் கொடுத்திருக்கிறார்கள்?” என்று கேட்டால், இருப்பதிலேயே அதிகமாக தவெக கொடுத்ததாக வாக்காளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். “தூய சக்தி, நாங்கள் வாக்குக்கெல்லாம் பணம் கொடுக்க மாட்டோம்” என்றுதான் கடந்த தேர்தலிலும் முதலமைச்சர் பிரசாரம் செய்தார், இப்போதும் பிரசாரம் செய்கிறார். இது பொதுமக்கள் கொடுத்த வாக்குமூலம். இருக்கிறதிலேயே அதிகமாகக் கொடுத்திருப்பது தவெக. “நீங்களும் அந்த அளவுக்கு உங்களால கொடுக்க முடியாது என்றாலும் கொஞ்சமாவது கொடுங்கள்” என்று எங்களோடு பேரம் பேசுகிற ஒரு நிலைமையை வாக்காளர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் புகார் அளிப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

गणितीय विज्ञान संस्थान, चेन्नई
THE INSTITUTE OF MATHEMATICAL SCIENCES, CHENNAI
(Department of Atomic Energy, Govt. of India)

अक्टूबर / October 01, 2026

विज्ञापन संख्या / Advt No.04-R/IMSc/2026

गविसं द्वारा नियमित संकाय पदों (7 वें सीपीसी के तहत वेतन मैट्रिक्स में स्तर-12 एवं स्तर-13) पर सीधी भर्ती हेतु ऑनलाइन आवेदन आमंत्रित किए जाते हैं। विस्तृत जानकारी के लिए, कृपया हमारी वेबसाइट देखें:
https://www.imsc.res.in/facultyrecruitment

IMSc invites online applications for Direct Recruitment for filling up of regular **Faculty positions (Level-12 and Level-13 in Pay Matrix under 7th CPC)**. For more details, please visit our website **https://www.imsc.res.in/facultyrecruitment**.

Sd/-
कुलसचिव / REGISTRAR

தெற்கு ரயில்வே

மின் பிரிவு (பொது), கட்டுமானம், எழும்பூர், சென்னை

துணை முதன்மை மின் பொறியாளர், பொது, கட்டுமானம், தெற்கு ரயில்வே, எழும்பூர், சென்னை - 600008 அவர்கள், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பணிகளுக்கான மின்-ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்	பணிகளின் பெயர்
1	E-HQ-CN-EOT-20-2026-27, நாள்: 25.09.2026	BBQ - வந்தேபாரத்: பேசின் பாலம் (BBQ) நிலையத்தில், வந்தேபாரத் கோச் பராமரிப்பு டிப்போ மற்றும் நிலைய பணிமனைக்காக, மின் ஒளிவிளக்கு மற்றும் மின் அளிப்பு ஏற்பாடுகள் செய்தல் (PH-42)
2	E-HQ-CN-EOT-21-2026-27, நாள்: 25.09.2026	பேசின் பாலம் - ஜோலார்பேட்டை (BBQ - JTJ): (1) பேசின் பாலம் டிப்போவில் CAMTECH தரங்களுக்கு, NMG கோச்சுகளுக்காக, பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் 4 எண்ணிக்கை Stabling லைன்களை விரிவாக்கம் செய்தல் - (PH-42); (2) பேசின் பாலம் (BBQ) கோச்சிங் டிப்போவில், CAMTECH பிட்-லைனின் (NL-6-540m) முன்னறிவிக்கப்பட்ட ஒரு எண்ணிக்கை (PH-16); (3) ஜோலார்பேட்டை (JTJ) நிலையம் யார்டில், பயன்பாடு ஷிஃப்டிங் (utility shifting) செய்தல் (PH-16) - ஆகியவற்றுக்காக மின்னாற்றல் வழங்குதல் மற்றும் ஒளிவிளக்கு ஏற்பாடுகள் செய்தல்
3	E-HQ-CN-EOT-22-2026-27, நாள்: 25.09.2026	பின்வரும் இடங்களில் சரக்குக் கொட்டகைக்கான (Goods Shed) உள்கட்டமைப்புகளை மேம்படுத்தி/நவீனமயமாக்கல் - (i) சேலம் மற்றும் சேலம் மார்க்கெட் (ii) கோயம்பத்தூர் வடக்கு மற்றும் இருகூர் - சரக்குக் கொட்டகைக்கு (Goods Shed), மின் ஏற்பாடுகள் போன்ற, சரக்கு அலுவலக கட்டடங்கள், ஊழியர்கள் ஓய்வு அறை மற்றும் அணுகுச்சாலை ஒளிவிளக்கு போன்ற உயர்கம்ப ஒளிவிளக்கு, மின் வழங்கும் ஏற்பாடுகள் முதலியன

வ. எண்	நிறை வேற்றும் காலம்	பணியின் சராசரி மதிப்பு	முன் வைப்புத் தொகை (EMD)	ஒப்பந்தப் புள்ளி மூடும் நாள் & நேரம்	ஒப்பந்தப் புள்ளி திறக்கும் நாள் & நேரம்
1	12 மாதம்	₹ 9,38,02,509.04	₹ 18,76,100	22.10.2026 முற்பகல் 11.00 மணி	22.10.2026 முற்பகல் 11.30 மணி
2	12 மாதம்	₹ 5,30,23,143.39	₹ 10,60,500		
3	6 மாதம்	₹ 3,51,39,736.88	₹ 7,02,800		

முழுமையான விவரங்களை **www.ireps.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

துணை முதன்மை மின் பொறியாளர்,
கட்டுமானம், சென்னை எழும்பூர் – 600008

வடக்கு மத்திய இரயில்வே

மின்-ஒப்பந்தப்புள்ளி எண். - GSU-ST-SKB-7-2026
தேதி: 29.09.2026

மின்-டெண்டர் அறிவிப்பு

இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக வட மத்திய இரயில்வே, பிரயாக்ராஜின் கதி சக்தி பிரிவு (சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு) துணைத் தலைமை சிக்னல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியாளர் பின்வரும் பணிகளுக்காக, அதில் குறிப்பிடப்பட்டுள்ள மின்-டெண்டர் தொடங்கும் தேதியில் மதியம் 12.00 மணி வரை, பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் திறந்த நிலை மின்-டெண்டரை வரவேற்கிறார். டெண்டரின் விவரங்கள் பின்வருமாறு:-

வ.எண்: 1	**டெண்டர் எண்: 7**	**வேலையின் தோராயச் செலவு:** ரூ.2,92,79,762.94

பணியின் பெயர்: பிரயாக்ராஜ் கோட்டத்தில் உள்ள ஷிகோஹாபாத் நிலையத்தில், சரக்கு ரயில் பாதையை (GT-2) முழு நீளத்திற்கு நீட்டிப்பது தொடர்பான பணிகளின் ஒரு பகுதியாக, ஏற்கெனவே உள்ள EI மற்றும் அதனுடன் தொடர்புடைய சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு (S&T) அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள்/திருத்தங்கள்.

முன்பணம்: ரூ.5,85,600.00	டெண்டர் படிவத்தின் விலை: 0.00
நிறைவு காலம்: 12 மாதங்கள்	டெண்டர் திறக்கப்படும் தேதி: 23.10.2026

2. **ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைப்பது:** ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் www.ireps.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும். 3. **டெண்டர் திறக்கப்படும் நேரம் மற்றும் இடம்:** பிரயாக்ராஜ் கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகத்தில், முன்னரே தீர்மானிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குப் பிறகு 12:30 மணிக்கு மின்-ஒப்பந்தப்புள்ளி முறையில் டெண்டர் திறக்கப்படும்.

2238/26(AK)

North central railways @CPRONCR www.ncr.indianrailways.gov.in

UCO BANK **குண்டூர் மிட் கார்ப்பரேட் கிளை (0223),** 9/1, அருண்டேல்பேட்டை, குண்டூர்-522002. தொலைபேசி: 0863-2241789, 9230500223. மின்னஞ்சல்: guntur@ucobank.co.in

அசையா சொத்துகளுக்கான மின்-ஏல விற்பனை குறித்த பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002-ன் கீழ் அசையா சொத்து விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன்தாரர்(கள்)/ இணைப் பொறுப்புடையவர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கடனீட்டு கடனீந்தோரான யூகோ வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட **அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டு,** கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் வைக்கப்பட்ட / பிணையமாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரரகளிடமிருந்து யூகோ வங்கிக்குச் செலுத்த வேண்டிய கீழே குறிப்பிடப்பட்ட நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, **12-11-2026 அன்று ‘‘உள்ளது உள்ளவிடத்தில்’’, ‘‘உள்ளது உள்ளவாறு’’ என்ன உள்ளதோ அப்படியே"** என்ற அடிப்படையில் விற்கப்படும்.

கடன்தாரர்களின் பெயர்: M/s. எம்ஜி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஹோல்டிங்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், (முன்னர் அஸ்வினி ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்) கார்ப்பரேட் **அலுவலகம்:** எண்.6/11, பிரகாதாம்பாள் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு– 600006, பதிவு முகவரி: எண். 39, பெருமாள் கோயில் தெரு, கவுண்டர்பாளையம், திருவள்ளூர், தமிழ்நாடு– 600120, & #11–476/B, வில்லா எண்.7, NSR வில்லாஸ், NH 16, மங்களகிரி–522503. & #8–2–418, மீனாட்சி ஹவுஸ், சாலை எண்.7, பஞ்சாரா ஹில்ஸ், ஹைதராபாத், தெலுங்கானா–500034. **ஜாமீன்தாரர்கள்: 1. ஸ்ரீமதல ராஜேந்திர குமார், த/பெ, சந்திரசேகர ராவ், இயக்குநர், எம்ஜி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஹோல்டிங்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்,** பிளாட் எண்.201, ஸ்ரீமான் ரெசிடென்சி, 4வது லைன், வித்யா நகர், சந்திரமௌலி நகர், குண்டூர், ஆந்திரப் பிரதேசம்–522007. & #11–476/B, வில்லா எண்.7, NSR வில்லாஸ், NH 16, மங்களகிரி–522503. & பிளாட் எண்.402, SVE விஜயா என்கிளேவ், சிலிக்கான் டவர்ஸ் அருகில், கோண்டாபூர், ஹைதராபாத், தெலுங்கானா–500081. **2. ஸ்ரீமதலா அஷ்வின் குமார், இயக்குநர், M/s, எம்ஜி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஹோல்டிங்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்,** எண்.6/11, பிரஹதாம்பாள் தெரு, நுங்கபாக்கம், சென்னை–600006, தமிழ்நாடு. **மேலும் முகவரி:** கதவு எண்.1–10–182/9, ஏ–பிளாக், பிளாட் எண்.101, ஸ்ரீநிலையா அபார்ட்மென்ட்ஸ், மயூரி மார்க், பேகம்பேட், ஹைதராபாத், தெலுங்கானா–500016, **3. ஸ்ரீஜகர்லமுடி சுனில் குமார், த/பெ, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பாபு,** 4–110–1, கோதபேட்டா அலுவலகம், சிராலாமூர் அருகே, கோதபேட்டா, டி.ஆர்.எஸ்.பி. மண்டல், பிரகாசம் மாவட்டம். 523157. **4. ஸ்ரீஜகர்லமுடி வெங்கட அனில் குமார், த/பெ, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பாபு,** 4–109–4,1, ILTD விரிவாக்க காலனி, கொத்தபெட்டா கிராமம், சிராலா, கொத்தபேட்டா (கிராமப்புறம்), பிரகாசம் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்–523157. **மேலும் முகவரி:** 4–109–4,1, ILTD விரிவாக்க காலனி, கோதபேட்டா கிராமம், சிராலா, கோதபேட்டா (கிராமப்புறம்), பிரகாசம் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்–523157, **5. மதலா சரோஜினி க/பெ, மறைந்த மதலா கோவர்தன ராவ்,** கதவு எண்.5–90– 65, 4/2, சந்திர மௌலி நகர், ஐடிபிஐ பேங்க் அருகில், குண்டூர், குண்டூர் மாவட்டம்–522007. **6.M/s. MSA வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (கார்ப்பரேட் ஜாமீன்தாரர்),** பழைய எண்.6, புதிய எண். 11, பிரகதாம்பாள் வீதி, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு– 600034. நிலுவைத் தொகை: **30.09.2020 தேதியின்படி ரூ.23,82,70,324.90 (ரூபாய் இருபத்து மூன்று கோடியே எண்பத்து இரண்டு லட்சத்து எழுபதாயிரத்து முன்னூற்று இருபத்து நான்கு மற்றும் பைசா தொன்னூறு மட்டும்) (30.09.2020 வரையிலான வட்டி உட்பட) மேலும் வட்டி, இதர கட்டணங்களுடன்.**

சொத்து விவரங்கள்

சொத்து எண்.1: மங்களகிரி, சார் பதிவு அலுவலகத்தில் காலஞ்சென்ற **மதல கோவர்தன் ராவ் அவர்களின் மனைவி மதல சரோஜினிக்குச்** சாதகமாக நிறைவேற்றப்பட்ட, **11.11.1983** தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் எண். 77/1983. **சொத்தின் விவரம்: அட்டவணை "A":** சந்திரமௌலி நகர், 2வது குறுக்கு, 4வது வரிசையில் அமைந்துள்ள, நகராட்சி மதிப்பீட்டு எண். 5091–ஐக் கொண்ட, கதவு எண். 5–90–65 உடைய, 370.75 சதுர கெஜம் அல்லது 309.47 சதுர மீட்டர் நிலப்பரப்புள்ள, தரைத்தளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களைக் கொண்ட ஆர்சிசிகூரையுடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் முதலியவற்றின் ஒரு பகுதி. இதன் கதவு எண். 7/D பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது: எல்லைகள்: கிழக்கு: திரு சி. அவர்களின் சொத்து. வெங்கட ராவ்: 45’3’’. தெற்கு: ஸ்ரீதருவுரு வீரையாவின் சொத்து: 67’11’’, மேற்கு: 40’ அகலமுள்ள முனிசிபல் கார்ப்பரேஷன் சாலை: 50’6’’. வடக்கு: ஸ்ரீகனுரு நாராயண ராவ் சொத்து: 71’3’’. இந்த எல்லைகளுக்குள் **370.7 1½ சதுர அடி அல்லது 309.47 சதுர மீட்டர் நிலம் குடியிருப்பு கட்டிடத்துடன் உள்ளது.**

நிர்ணய விலை: ரூ. 3,83,00,000/- (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து மூன்று லட்சம் மட்டும்), முன் வைப்புத் தொகை ரூ.38,30,000/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) ஏல உயர்வுத் தொகை: ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

சொத்து எண் 2: சிலகலூரிபேட்டை சார் பதிவு அலுவலகத்தின் 02.08.2018 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம் எண் 4965/2018, இது **M/s. எம்ஜி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஹோல்டிங்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பெயரில், அதன் கூடுதல் இயக்குனர் கே. வாசுதேவன்** அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. குண்டூர் மாவட்டம், நரசராவ்பேட்டை பதிவு மாவட்டம், சிலகலூரிபேட்டை துணை மாவட்டம், சிலகலூரிபேட்டை நகராட்சி எல்லைகளுக்குள், புருஷோத்தபட்டணம், சிலகலூரிபேட்டை, 37வது வட்டம், அடங்கல் கதா எண் 2307–இன் படி கதவு எண். 350/A3 மற்றும் கதவு எண் 350–A3–A கொண்ட சொத்தின் ஒரு பகுதி. இதில் 0.75 ஏக்கர் நிலம் பின்வரும் எல்லைகளால் சூழப்பட்டுள்ளது: எல்லைகள்: கிழக்கு: நலம் நாகேஸ்வர ராவ் அவர்களுக்குச் சொந்தமான நிலம். மேற்கு: பட்டினேனி சித்தையா மற்றும் தோட்டா சிவய்யா ஆகியோருக்குச் சொந்தமான நிலம். வடக்கு: ஷேக் சலீம் மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலம். தெற்கு: சர்க்கார் டோங்கா. இந்த எல்லைகளுக்குள் 0.303 ஹெக்டேர் (0.75 சென்ட்) அளவிலான விவசாய வறண்ட நிலம் மட்டுமே.

நிர்ணய விலை ரூ.27,33,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து முப்பத்து மூன்றாயிரம் மட்டும்) முன் வைப்புத் தொகை ரூ.2,73,300/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து முந்நூறு ரூபாய் மட்டும்) ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

சொத்து எண் 3: காலஞ்சென்ற மதலா சந்திரசேகர ராவின் மகன் திரு. மதலா ராஜேந்திரா பெயரில் ரங்காரெட்டி மாவட்டம் சார் பதிவு அலுவலகத்தில் 28.05.2005 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம் எண். 7377/2005. **அட்டவணை–A:** ரங்காரெட்டி மாவட்டம், செரிலிங்கம்பள்ளி மண்டலம் மற்றும் நகராட்சி, கொண்டாபூர் கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 10 பகுதியில் உள்ள மனை எண் 7, 663 சதுர கெஜம் (554.55 சதுர மீட்டருக்குச் சமம்) பரப்பளவு கொண்டதும், பின்வருமாறு எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் ஆகும்: கிழக்கு: எம். சுஷ்மா குமார மற்றும் M/s. போப்பனா ஹவுசிங் ஆகியோரின் மனை எண் 6, தெற்கு: அமரேந்தர் ரெட்டியின் சொத்து, மேற்கு: 40 அடி அகலச் சாலை, வடக்கு: ராகவேந்தர் ராவின் சொத்து. **அட்டவணை–B:** ரங்க ரெட்டி மாவட்டம், செரிலிங்கம்பள்ளி மண்டலம் மற்றும் நகராட்சி, கொண்டாபூர் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண். 10 பகுதியில் உள்ள மனை எண். 7–இல் இருக்கும் 663 சதுர கஜ நிலத்தில், 35 சதுர கஜம் பிரிக்கப்படாத பங்குடன் கூடிய, 4–வது மாடியில் உள்ள பிளாட் எண். 402–இன் 1076 சதுர அடி அடித்தளப் பரப்பளவு (பொதுப் பகுதி, ஒரு கார் நிறுத்துமிடம் உட்பட) கொண்ட அந்த முழு நிலப்பகுதியும் உள்ள சொத்து, பின்வரும் எல்லைகளால் சூழப்பட்டுள்ளது: கிழக்கு: நடைபாதை மற்றும் திறந்தவெளி, மேற்கு: திறந்தவெளி, வடக்கு: படிக்கட்டு மற்றும் காற்றோட்டக் குழாய், தெற்கு: மின்தூக்கி மற்றும் காற்றோட்டக் குழாய்.

நிர்ணய விலை ரூ.68,27,000/- (ரூபாய் அறுபத்தெட்டு லட்சத்து இருபத்தேழு ஆயிரம் மட்டும்), முன் வைப்புத் தொகை: ரூ.6,82,700/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்திரண்டு ஆயிரத்து எழுநூறு மட்டும்) ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

சொத்து எண்.4: இனம் எண்.I: சிராலா சார் பதிவு அலுவலகம் தான பத்திரம் எண்.5389/2011 தேதி 21.11.2011 மற்றும் பகிர்வுப் பத்திரம் எண். 15/2005 தேதி 04.01.2005– இன்படி **திரு. ஜகர்லமுடி வெங்கட அனில் குமார், த/பெ, மறைந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பாபு & திரு.ஜகர்லமுடி சுனில் குமார், த/பெ, மறைந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பாபு** ஆகியோரின் பெயரில் உள்ள சொத்து. பிரகாசம் மாவட்டம், சிராலா துணை மாவட்டம், சிராலா மண்டல், சிராலா நகராட்சி, பேரலா கிராமம், சிராலா பழைய வார்டு எண்.3, தற்போதைய நகராட்சி வார்டு எண்.12, 13, பிளாக் எண்.2, T.S No. 28,29,30,31,32 பேரலா கிராமம் S.No.108/1– T.S.No.33/3 தற்போதைய பேரலா கிராமம் S.No. 110/5, எண். 13–10–7 தற்போதைய எண். 12–2–171 இல் உள்ள 254 சதுர கஜம் அதாவது 212 சதுர மீட்டர் பரப்பளவுள்ள ஒரு மனை. இது வடக்குப் பக்கத்தில் உள்ள இரயில் நிலையச் சாலை மற்றும் பேருந்து நிலையச் சாலை வழியாகச் செல்லும் பாதையின் மீதான உரிமைகளுடன் கூடியது. இதன் எல்லைகள்: கிழக்கு: வாங்குபவர்களின் நிலம்: 114 அடி, தெற்கு: திரு ஜகர்லமுடி சத்யநாராயண பாபு முதலியோரின் சொத்து: 20 அடி. மேற்கு: ரயில் நிலையச் சாலை: 114 அடி. வடக்கு: பேருந்து நிலையச் சாலை: 20 அடி. இனம் எண்.II: பிரகாசம் மாவட்டம், சிராலா துணை மாவட்டம், சிராலா மண்டலம், சிராலா நகராட்சி, பேரலா கிராமம், சிராலா பழைய வார்டு எண்.3 தற்போதைய நகராட்சி வார்டு எண்.12,13 பிளாக் எண்.2, T.S No. 28,29,30,31,32 பேரலா கிராமம் S.No.110/5, எண்.13–10–7 தற்போதைய எண்.12–2–171, 1128 சதுர கெஜம் அல்லது 943 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி மனை, வடக்குப் பக்கத்தில் பேருந்து நிலையச் சாலை வழியாகச் செல்லும் பாதையின் மீதான உரிமைகளுடன், பின்வருவனவற்றால் சூழப்பட்டுள்ளது: கிழக்கு: யர்லகட்டா உமா தேவியின் சொத்து: 114 அடி. தெற்கு: ஜகர்லமுடி சத்யநாராயண பாபுவின் சொத்து: 89 அடி. மேற்கு: "A" அட்டவணை சொத்து: 114 அடி. வடக்கு: பேருந்து நிலையச் சாலை எல்லை: 89 அடி.

நிர்ணய விலை ரூ.11,63,06,000/- (ரூபாய் பதினொரு கோடி அறுபத்து மூன்று லட்சத்து ஆறாயிரம் மட்டும்), முன் வைப்புத் தொகை: ரூ.1,16,30,600/- (ரூபாய் ஒரு கோடியே பதினாறு லட்சத்து முப்பதாயிரத்து அறுநூறு மட்டும்), ஏல உயர்வுத் தொகை: ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)

மின்– ஏலத்தின் தேதி மற்றும் நேரம்: 12–11–2026 (வியாழக்கிழமை) அன்று காலை 11:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை. (தலா 10 நிமிடங்களுக்கு வரம்பற்ற தானியங்கி நீட்டிப்புடன்)

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து வங்கியின் இணையதளமான https://baanknet.com–ஐப் பார்வையிடவும். மேலும், ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர், முன் அனுமதி பெற்று, குண்டூர் மிட் கார்ப்பரேட் கிளை, 9/1, அருண்டேல்பேட்டை குண்டூர்–522002 என்ற முகவரியில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்கள்: 0863–2241789, 9230500223, மின்னஞ்சல்: guntur@ucobank.co.in.

தேதி: 29-09-2026, இடம்: குண்டூர்.
ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூகோ வங்கி, குண்டூர் மிட் கார்ப்பரேட் கிளை, குண்டூர்.